7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984, (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு; தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,05,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே' ''To discuss policy'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,05,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, ''சென்னையில் உள்ள பெருநகர் நீதிபதிகளின் அலுவலகம் பழைய சட்டிடங்களில் நடத்தப்படுவதால் தற்கால மக்கள் தொகைக்கேற்ப குற்றங்கள் அதிகமாக இருப்பதால் விசாரணைக்கு மக்கள் வருவதற்கு ஏற்றவகையில் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகிற ரூ. 12,05,40,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ''திருநெல்வேலியில் நீதிமன்ற கட்டிடம் திறக்கப்பட்டும் இன்னும் செயல்படாமல் இருப்பது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,05,40,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''